[1982 பிப்ரவரி 4

வறட்சிப் பகுதிகளில் கால்நடைகளுக்கு தண்ணீர் தொட்டிகள் கட்டும் திட்டம்.

*வினா எண். 39—திரு. எம். கே. ராஜமாணிக்கம், திரு. மா. சுப்பிரமணியன் : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் கால்நடைகளுக்கான குடிதண்ணீர் தொட்டிகளைக் கட்டுவதற்கான திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அரசு அதற்கு எவ்வளவு தொகை ஒதுக்கீடு செய்துள்ளது ?

(இ) எத்தனை தண்ணீர் தொட்டிகளைக் கட்ட உள்ளது?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : (அ) ஆம்.

(ஆ) மற்றும் (இ): ஒரு தண்ணீர் தொட்டிக்கு ரூ. 1,500 வீதம் 600 தொட்டிகள்கட்ட ரூ. 9 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

திரு. மா. சுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, கோடை காலங்களில் எல்லா இடங்களிலும் கால்நடைகளுக்குத் தண்ணீர் தட்டுப்பாடு அதிகரித்துள்ளதால் எல்லா பஞ்சாயத்துக்களிலும் கால்நடைகளுக்கு குடிநீர் தொட்டி கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மொத்தம் 600 தொட்டிகள். 432 தொட்டிகள் கட்டப்பட்டிருக்கின்றன. எங்கெங்கு தண்ணீர் கிடைக்கின்றதோ அங்கெல்லாம் தண்ணீர் தொட்டிகள் கட்டிக் கொண்டிருக்கிறோம்.

திரு. மா. சுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, இத்திட்டத்தின்படி தஞ்சை மாவட்டத்தில் தண்ணீர் தொட்டிகள் எங்கெங்கு கட்டப்படுகின்றன ? திருவையாறுக்கு இத்திட்டத்தை விரிவு படுத்தும் எண்ணம் அரசின் பரிசீலனையில் இருக்கின்றதா ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் 66 தண்ணீர் தொட்டிகள் கட்டுவதற்கு 99,000 ரூபாய் செலவு செய்யப்பட்டிருக்கின்றது. திருவையாறு தொகுதியிலே தண்ணீர்த் தொட்டிகள் கட்டும் திட்டம் பரிசீலனையில் உள்ளது.